**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்ய தற்போது ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 1,000 திருக்கோயில்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதிகளில் அந்த நிதியை ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தித் தருமாறு கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**30**—

## விளையாட்டுத் திடல்

***13135—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, 75—வது வட்டத்தில் உள்ள சிவசண்முகபுரம் A பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*2019 ஜனவரி 7]*

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டுவரும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவரது தொகுதிக்குட்பட்ட 75–வது வட்டத்தில் உள்ள சிவசண்முகபுரம் A பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க கோரிக்கை வைத்துள்ளார். திரு.வி.க. நகர் தொகுதி, 75–வது வட்டத்தில் உள்ள சிவசண்முகபுரம் A பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என் வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் மத்தியில் தோழமையுடன் போட்டி மனப்பான்மையை உருவாக்கி, அவர்களிடத்தில் ஆளுமைத் திறனை மேம்படுத்தி, சமூகப் பணிக்காகத் தங்களை அர்ப்பணிக்கின்ற உணர்வினை உருவாக்கிக் காட்டுவதுதான் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நோக்கமாக இருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அந்த நோக்கங்களின் அடிப்படையில்தான் 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, அன்றைக்கு முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், அன்றைக்குத் துணை முதல்வராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர், ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களும் செயல்பட்டு வந்தார்கள். அப்படி செயல்பட்டதன் விளைவாகத்தான், அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது புனேவில் நடைபெற்ற* Commonwealth Youth Games–*ல் தமிழகத்தைச் சார்ந்த வீரர்கள் இரண்டு தங்கப் பதக்கங்களையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற முடிந்தது.*

[2019 ஜனவரி 7

முற்பகல் 11–05

பங்களாதேஷிலும், டாக்காவிலும் நடைபெற்ற 11–வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சார்ந்த வீரர்கள் 14 தங்கப் பதக்கங்களையும், 9 வெள்ளிப் பதக்கங்களையும், 1 வெண்கலப் பதக்கத்தையும் பெற முடிந்தது என்று சொன்னால், அதற்குக் காரணம் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களும், அண்ணன் தளபதி அவர்களும் எடுத்த சீரிய முயற்சிகள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம் அன்றைக்கு மாவட்ட தலைநகரங்களில் இருந்த பள்ளி, கல்லூரிகளில் விளையாட்டு அரங்கங்கள் அமைத்து, தமிழகத்தில் 5 அடுக்கு Pyramid முறையில் தர வரிசையை உருவாக்கி, விளையாட்டுத் துறையில் அதைச் செயல்படுத்திக் காட்டியது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி.

அதைப்போலவே தேசிய அளவிலும், உலக அளவிலும் வெற்றி பெற்ற வீரர்களை ஊக்குவிக்கும் வண்ணமாக மற்ற மாநிலங்கள் தருவதைக் காட்டிலும், தமிழக அரசாங்கத்தின் சார்பில் உயர்ந்த பரிசினையும், அதிக ஊக்கத் தொகையினையும் வழங்கி கௌரவப்படுத்தியது. உலகத்தரத்திற்கு இணையான விளையாட்டு அரங்கங்களை சென்னையிலும், கோவையிலும், மதுரையிலும், நெல்லையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி உருவாக்கித் தந்தது. அப்படி உருவாக்கியதால்தான் உலக அளவில் அன்றைக்கு தமிழகத்தைச் சார்ந்த வீரர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வாகை சூடிய ஒரு நிலை இருந்து வந்தது. திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியில் 75–வது வார்டில் சிவசண்முகபுரம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கு A பகுதியில் இருக்கின்ற இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, தங்கள் திறமைகளை வெளிக்காட்டிக்கொண்டு வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிவசண்முகபுரம் 2–வது தெருவில் 176 எண் கொண்ட இல்லத்தில் வசிக்கின்ற செல்வன் கமல்ராஜ் என்ற மாணவர் சென்னை பல்கலைக்கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியிலே ஒரு பதக்கத்தை வென்றிருக்கிறார். அதைப்போலவே சிவசண்முகபுரம் 2–வது தெரு 180–வது எண் கொண்ட இல்லத்தில் வசிக்கின்ற யோகேஷ் என்ற மாணவர் சென்னையில் மாவட்ட அளவிலே பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற கைப்பந்து

*2019 ஜனவரி 7]*

*போட்டியிலே ஒரு பதக்கத்தை வென்றிருக்கிறார். இப்படி, சிவசண்முகபுரம் பகுதியிலே உள்ள எண்ணற்ற இளைஞர்களும், மாணவர்களும் விளையாட்டுகளில் ஆர்வம் கொண்டு, தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆனால், அங்குள்ள இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் விளையாடுவதற்கு விளையாட்டுத் திடல் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் என்கிற தாயகம் கவி, ஒரு கேள்வி கேட்பதற்கு இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால் எப்படி?*

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு விளையாட்டுத் திடல் இல்லாத காரணத்தினால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மற்றவர்களுக்கு எப்படி நான் வாய்ப்பு தருவது?*

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** *சிவசண்முகபுரம் பகுதி கிட்டத்தட்ட 40 ஆண்டுக்காலத்திற்கு முன்னால் உருவானது. ஆரம்பத்தில் அங்கிருந்த ஒரு காலியிடத்தை மாணவர்களும், இளைஞர்களும் பயன்படுத்தி வந்தனர். அதற்குப் பிறகு அந்த காலியிடத்தில் வீடுகள் அமைந்துவிட்ட காரணத்தினால் இன்றைக்கு விளையாடுவதற்கு இடமில்லாமல் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற குப்பைக் கிடங்கிலும், அருகில் இருக்கின்ற மூலிகைப் பூங்காவிலும் கால்பந்து போட்டியும், கிரிக்கெட் போட்டியும் நடத்தி, விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அங்குள்ள இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அங்கே ஒரு விளையாட்டுத் திடலை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்படிக் கேள்வி கேட்டால், மற்றவர்களுக்கு நான் எப்படி வாய்ப்பு தருவது? மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான*

அம்மாவின் அரசு பல்வேறு துறைகளில் சாதனைகள் படைத்து, இந்தியாவில் தமிழகத்தை ஒரு முன்னணி மாநிலமாக உருவாக்கி வருகிறது. அதிலே விளையாட்டுத் துறையும் முக்கியத்துவம் பெற்று, வளர்ச்சியடைந்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு தொலைநோக்குத் திட்டத்தோடு செயல்படும் அரசாக இருப்பதோடு, இளைஞர்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இளைஞர்களை விளையாட்டுத் துறையில் சாதனை படைக்கும் வகையில் உருவாக்கிட உலகத் தரம் வாய்ந்த பல்வேறு உள்விளையாட்டு மைதானங்களை அமைத்துள்ளது. பல்நோக்கு திட்டத்தோடு, பல்வேறு வசதிகளுடன் சென்னை நகரில் அவருடைய தொகுதிக்கு அருகிலே Jawaharlal Nehru Stadium, Jawaharlal Nehru Indoor Stadium, Mayor Radhakrishnan Hockey Stadium, Marina Swimming Pool, Velachery Swimming Pool, Shenoy Nagar Swimming Pool, Nungambakkam Tennis Stadium, Nehru Park Sports Complex ஆகியவை இருக்கின்றன. இதோடு மட்டுமல்லாமல், சென்னை மாவட்டத்தில் மட்டும் 212 இடங்களில் Corporation Playgrounds இருக்கின்றன. அம்மா அவர்களுடைய அரசு ஆட்சியில் இருக்கும்போதுதான் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு முக்கியத்துவம் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், விளையாட்டு வீரர்களுக்கு medal வழங்கும்போது, அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்கத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) விடுதியில் இருக்கும் மாணவர்களுக்கு உணவுப்படி 75 ரூபாயாக இருந்ததை 250 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

இரண்டு வருடங்களில் 168 பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு, விளையாடி, பதக்கங்களை வென்ற வீரர்களுக்கு, சுமார் 17 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் 96 பயிற்சியாளர்களுக்கு 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று விளையாட்டு வீரர்களுக்கு நல்ல செயற்திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. இன்றைக்கு Elite Scheme–ஐ, பன்னாட்டு விளையாட்டுப்

*2019 ஜனவரி 7]*

போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கு கொண்டு வந்துள்ளது. Elite Scheme–ல் ரூபாய் 10 இலட்சத்திலிருந்து 25 இலட்சம் ரூபாய் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதேபோன்று MIM Scheme–ல் 10 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கு Championship Development Scheme–மூலம் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட stadiums தமிழகத்தில் மட்டும்தான் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்லும் மாநிலங்களில் இந்திய அளவில் 8–வது இடத்தில் இருந்த நாம், இன்று 3–வது இடத்தில் இருக்கிறோம். ஏற்கெனவே இதைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அண்ணன் எடப்பாடியாரின் அரசு விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த ஆகஸ்ட் 15 ஆம் நாள், அரசு வேலைவாய்ப்பில் 3 சதவிகித இட ஒதுக்கீட்டினை வழங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அளவில் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவில், நம்முடைய மாநிலத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிக அளவில் ஊக்கத் தொகைகளை வழங்கி வருகின்றார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியான சிவசண்முகபுரத்தில், விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான இடம் இருந்து, அந்த இடத்தினைத் தேர்வு செய்து SDAT–க்கு ஒப்படைத்தால், அதனை மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்கு எடுத்துச்சென்று, அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இரண்டாவது கேள்வியை எவ்வளவு நேரத்திற்கு கேட்கப் போகிறீர்கள். சீக்கிரம் கேள்வி கேட்டு முடியுங்கள்.

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் விளையாட்டுத் திடல்கள் அத்தனையும் என் தொகுதியிலிருந்து பல கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டிய தூரத்தில் இருக்கின்றன. நான் விளையாட்டுத் திடலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டது என்னுடைய தொகுதியில்தான். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல் எனது தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அங்கிருக்கின்ற இளைஞர்களும், மாணவர்களும், தினம், தினம் போக்குவரத்து செலவு செய்து அந்த விளையாட்டுத் திடல்களுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளையாட்டுத் திடல் அமைக்க இடம் இருக்குமென்று சொன்னால், அதனை நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில், நான் குறிப்பிடுகின்ற சிவசண்முகபுரம் ‘B Block’ பகுதியில் ஒரு திடல் இருக்கிறது. அந்தத் திடல் மாநகராட்சி அதிகாரிகளால் சரிவர பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. எனவே, அந்தத் திடலை விளையாட்டு மேம்பாட்டுத் துறை தன்வசம் எடுத்துக்கொண்டு, உரிய முறையில் மேம்படுத்தித் தந்தால், அங்குள்ள இளைஞர்களும், மாணவர்களும் அதனை பயன்படுத்திக்கொள்வார்கள்.

அதேபோன்று, மாநகராட்சிவசம் இருக்கின்ற இடத்தில் குப்பை கொட்டும் கிடங்கு ஒன்று எஸ்.எஸ். புரத்தில் உள்ளது. அந்தக் குப்பைக் கிடங்கினால், அருகில் இருக்கின்ற எஸ்.எஸ். புரம் ஏ பிளாக், பி பிளாக் பகுதிகள், வரதம்மாள் தோட்டம், நம்மாழ்வார்பேட்டை பகுதிகளிலுள்ள மக்கள் தினம், தினம் சுகாதார சீர்கேடுகளினால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். மேலும், கொசுத் தொல்லையும் அதிகமாக இருக்கின்றது. எனவே, எஸ்.எஸ். புரத்தை ஒட்டி, மூலிகைப் பூங்காவின் அருகில் இருக்கின்ற அந்தக் குப்பைக் கிடங்கை விளையாட்டுத் துறை தன்வசம் எடுத்துக்கொண்டு, அங்கே விளையாட்டுத் திடலை உருவாக்கித்தரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய அதிகாரிகளை அனுப்பி வைத்தால், நானே அந்த இடங்களை அடையாளம் காட்ட தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

*2019 ஜனவரி 7]*

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் இடம் அங்கு இருந்து, SDAT–யிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் கண்டிப்பாக அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 1 முதல் 7 வரை) @

### பட்டியல்–1

**1—**

### கிருஷ்ணா கால்வாய் நீர்

**வினா எண் 16258—திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூண்டி நீர்த்தேக்கத்திற்கு ஆகஸ்ட் மாதத்தில் வர வேண்டிய கிருஷ்ணா கால்வாய் நீரை முழுமையாகப் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**—

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இரு மாநிலங்களுக்கு இடையேயான 18–4–1983 நாளிட்ட ஒப்பந்தப்படி, தமிழ்நாட்டிற்கு 2017–2018 ஆம் ஆண்டிற்கான கிருஷ்ணா நதி நீரினை பெறும்பொருட்டு, அரசால் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையினால், கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 27–12–2017 முதல் தண்ணீர் திறக்கப்பட்டு, 2.167 டி.எம்.சி. அடி கிருஷ்ணா நீர் 12–3–2018 காலை வரை தமிழ்நாடு எல்லையில் பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது.*

---

*@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.*